




# போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

ஆசிரியர்கள்: காஞ்சி.மணிமொழியார், மட.இளஞ்செழியன் [illegible]

78

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 14
சென்னை, 29—1—49

வீச்சு 22



# வருங்கால உலகம்!

[இருபதாம் நூற்றாண்டின்
ணையற்ற அறிஞர்கள் என்று
லகம் முழுவதும் பாராட்டப்
டும் பேரறிஞர்கள் இருவர். ஒரு
ர் சிறந்த நாடகாசிரியர் ஜார்ஜ்
பர்னாட்ஷா! மற்றவர் சிந்த
னச் சிற்பி எச். ஜி. வெல்ஸ்!
வெல்ஸ், உலகர், எதிர்காலத்தில்
ப்படி இருக்கும் என்பதைச் சித்
ரித்துக் காட்டுவதில அற்புத
றமை படைத்தவர். அணுக்
ண்டு மூன்றாண்டுகளுக்கு முன்பு
ான் கண்டுபிடிக்கப்பட்டது.
னுல் அறிஞர் வெல்ஸ் 25
ண்டுகட்கு முன்னரே அணுக்
ண்டுப் போர் எப்படி எப்படி
க்கும் என்பதைப்பற்றி அரிய
ல் ஒன்று இயற்றியுள்ளார்.
வர். எதிர்காலம் இப்படி இருக்
ம் என்று பல ஆண்டுகட்கு
ன் கண்டறிந்து கூறிய உண்மை
ள் எல்லாம் இப்போது ஒவ்
வொன்றாக நடைமுறைக் கீதமாக
றி வருவதைக் கண்டு வியவா
ர் இலர். அவர் அமெரிக்க
களுக்காக, ஆற்றிய அரிய
சொற்பொழிவு இது.]

"நமது பேரன்மார் உலகம்"
(உலகம் — எதிர்காலத்தில்) என்
ற பொருள் பற்றிப் பேசும்
என்னைக் கேட்டுக்கொண்டதற்
கிணங்க நான் பேச முன் வந்துள்
ளேன். அதாவது வரப்போகிற
சந்ததியார்களான நமது
பேரன்மார்களுக்காக இப்போ
திருக்கிற நாம் எந்த மாதிரியான
உலகத்தைத் தயாரித்துத் தரப்போ
கிறோம் என்பது அதன் கருத்தா
கும். அப்படியானால் நாம் நம்மு
டைய பேரன்மார்களுக்காக எந்த
மாதிரியான உலகத்தைச் செய்து
கொண்டிருக்கிறோம் என்று உங்
களைக் கேட்கிறேன். இந்தக் கேள்
விக்கு என்னவிதமான பதில்
சொன்னாலும் பொருந்தும். ஏனெ
னில் இது வருங்காலத்தைப்பற்றிய
பேச்சாகையால் யார் எதை

(4-ம் பக்கம் பார்க்க)

## இக்கால நரபலி!




இந்திய சர்க்கார் சார்பில் டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜி இன்னும் பத்தாண்டுகளுக்கு எந்த தொழிலையும் தேசியமயம் ஆக்குவதில்லை என்று முதலாளிகட்கு உறுதி கூறியுள்ளார்.

# இது உண்மையா?

[ம. சிங்காரவேலு]

**[மெஸ்மரிசம் என்பது ஓர் தந்திர வித்தை. இதை நம்பி ஏமாறும் பாமரர்கள் ஏராளம். பாமரர்கள் மட்டுமல்ல, சில விஞ்ஞானிகள்கூட இதை நம்பி ஏமாந்திருக்கின்றனர். ஆனால் மெஸ்மரிசம் இன்றுவரை ஓர் விஞ்ஞான பூர்வமான கலை என்று யாராலும் நிரூபிக்கப்படவில்லை. இந்த தந்திர வித்தையில் ஏதேனும் உண்மை உண்டா என்று இக்கட்டுரையில் ஆராய்ச்சி செய்கிறார் அறிஞர் சிங்காரவேலர். சிந்தனைக்கு நல்ல விருந்து!]**

மெஸ்மரிசம் என்று வழங்கும் கல்வி, மெஞ்ஞானமா? அதன் விபரமென்ன? கண்களுக்குத் தெரியாத பொருள்களைக் கண்டு பிடிக்கின்ற விஷயம் உண்மையா? தூரத்தில் நிகழும் அல்லது நிகழ்ந்த விஷயங்களைத் தெரிந்து சொல்லும் விஷயததின் உண்மை என்னவென்றெல்லாம் பல தோழர்கள் அடிக்கடி வினவுகின்றார்கள். இதனால் இந்த மெஸ்மரிசம் என்று அழைக்கப்படும் வித்தை அநேகர் மனதில் பதிந்து இருப்பதாகத் தெரிகிறது. இந்த மெஸ்மரிசம என்ற வித்தையை ஒரு காலத்தில் மெய்ஞ்ஞானமென்று சில மெய்ஞ்ஞானிகளே கூறிவந்திருக்கின்றனர். இது இன்று ஓர் போலி ஞானமென்று நிரூபிக்கப்படுகின்றது. இதைப் போன்றனவும், இதைச் சார்ந்தனவுமான இன்னும் சில போலிஞானங்களும் உண்டு. அவை யாவன:—ஒருவர் மனதில் தோன்றும் எண்ணங்கள் இன்னொருவர் மனதில் புலன்கள் வாயிலாக இல்லாமல் தோன்றுவது; தூரத்தில் நடக்கும் விஷயங்களைக் கண்கள் மூலமாக அல்லாமல் கண்டறிவது; இறந்தோர் சூட்சம தேகம் கண்களுக்குத் தோன்றுதல்; மேஜை, நாற்காலி, வீட்டு சாமான்கள், கதவு, ஜன்னல் முதலியன மனிதனால் அசைக்கப்படாமலே அசைதல் இன்னபிற போலி ஞானங்கள் பல ஆகும். இந்தத் தோற்றங்களைப் பொதுவாக மறைவான வித்தைகள் என்று அழைப்பதுண்டு. நமது பொது மக்கள் இம் மயக்க வித்தைகளை உணர்ந்து மூட நம்பிக்கைகளை விட்டொழிக்குமாறு இம்மறைவான வித்தைகளின் போலி உண்மையைச் சுருக்கமாக எடுத்துரைப்பாம்.

எனக்கு எழுபது வயது கிட்ட நெருங்கி வருகிறது. இது காறும் மறைவான வித்தையில் கூறும் தோற்றங்கள் ஒன்றுகூட என் அனுபவத்தில் வந்ததில்லை. நான் வசித்து வரும் இடம் மூட நம்பிக்கைகளில் மிகுந்திருக்கும் மீன் பிடிப்போரால் கடந்த 2000 வருஷங்களாக வசிக்கப்பட்டு வருகின்றது. என்னுடன் விளையாடியவர்கள் அநேகர் மாண்டனர். இன்னுஞ் சிலர் ஜீவித்து வருகின்றனர். இவர்களில் ஒருவராகிலும் சென்ற அறுபது வருஷங்களாகப் பேயோ, பிசாசோ, செத்தவர்களையோ, பார்த்ததாகச் சொன்னதில்லை. ஆனால் மாரியாத்தாளுக்கும், காத்தவராயனுக்கும், அண்ணன்மார், தம்பிமார், கன்னிகளுக்கும் பூசைகள் போடுவதில் குறைச்சல் இல்லை. என்ன பூசைகள் போட்டும், கும்பிட்டும், தெய்வங்கள் ஆடியும், எல்லைகளுக்குக் காவு கொடுத்தும் இவர்களை அகாலப்பிணி, மூப்பு, சாக்காடு விட்டொழிந்தபாடில்லை. மற்றத் தொழிலாளிகளில் வருஷமொன்றுக்கு 1000-பேரில் 30, 40 சாவென்றால் இவர்களில் 1000-க்கு 60-க்கு மேல் வருஷா வருஷம் சாகின்றனர். இவர்களில் அம்மை, விஷசுரம், வாந்திபேதி, வராத நாளில்லை. ஆனால் ஒவ்வொரு குப்பத்திலும் ஒன்று இரண்டு மாரியம்மன் கோவில்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வருஷா வருஷம் செலவாகும் பணம் 500 முதல் 1000-என்று சொல்லலாம். நான் வசிக்கும் இடம் நடுக்குப்பமென்று பெயர். இதில் ஆண், பெண் குழந்தைகள் 600-பேர் வசிக்கின்றோம். இதில் ஒரு கோவிலுண்டு. இதற்கு ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய் சொத்துண்டு. வருஷந்தோறும் இந்த மாரி அம்மனுக்கு ரூபாய் 2000 செலவாகிறது. ஆனால் ஒரு வைத்தியசாலைக்கு ரூபாய் 500 செலவு செய்யலாகாதாவெனில் அது கூடாதாம்! குப்பம் முழுமையும் நரகலோகமாகவே இருக்கும்!! இவர்களுடைய மூடத்தனத்தால், பிறக்கும் இரண்டு குழந்தைகளில் ஒன்று அகாலமரணமடைகின்றது. எங்களைத் தவிர மற்ற யாரும் 60 வயது அடைந்தவர்கள் இல்லை. இவ்வளவு விவரமாக ஏன் இந்தக் குப்பத்தாரின் நிலைமையைச் சொல்ல வந்தேனென்றால் இதே விதமாகவே நமது 30-கோடி நாட்டுப்புற மக்கள் இவ்வித மூட நம்பிக்கையில் ஆழ்ந்து வறுமை, பிணி, மூப்பு, சாக்காட்டால் கஷ்டப்படுகின்றனர் என்று விளக்கவென அறிக. எங்கள் குப்பம் நமது நாட்டிலுள்ள 15 லட்சம் கிராமங்களின் அடையாளமான கிராமமென அறிக. நாம் கூறிவரும் மூட நம்பிக்கைகளாகிய மாய வித்தைகளால் நமது கோடான கோடி மக்களுக்கு விளையும் தீமைகளையும் கேட்டையும் சிந்திக்கச் சிந்திக்க என்ன அபாய நிலைமையில் நமது நாடு இருந்து வருகின்றதென்பது நன்கு விளங்கவில்லையா? மதங்களில் மூட நம்பிக்கைகளால் விளையும் கேடு ஒரு பக்கமிருக்க மாய வித்தைகளால் விளையும் கேட்டினைச் சொல்லவும் வேண்டுமோ?

மயக்கவித்தை என்று கூறும் ஓர்வித தூக்கம் பண்டைக்காலமுதல் மெஸ்மரிசமென்று வழங்கிவந்தது. ஜர்மன் டாக்டர் மெஸ்மர் என்றவர் இந்த வித்தையை மிக்க சாமார்த்தியமாக கற்றுத் தெரிவித்தார். இந்த வித்தையின் விஷயமென்னவெனின் மனிதனுக்குள் ஒருவித நுட்ப சக்தியுண்டு. அந்த சக்தியைக் கொண்டு மற்றொருவனை விழிப்பில் தூங்கவைக்கக் கூடும். அந்த ஒருவித தூக்கத்தில் கண்களுக்குத் தெரியாத வஸ்துக்கள் தெரியும். மறந்துபோன விஷயங்களும் ஞாபகத்துக்கு வரும், எதைச் செய்யச் சொன்னாலும் அந்தத் தூக்கத்திலிருப்பவன்

செய்வான். சர்க்கரையை அந்தத் தூக்கத்திலுள்ளவனைக் கசக்கின்றதென்றுசொல்லச்சொன்னால் கசப்புக்கு வேண்டிய செய்கைகளையும் சைகைகளையும் செய்வான். அந்த நிலைமையிலுள்ளவனுக்கு சில நோய்களும் தீரும். டாக்டர் மெஸ்மர், இந்த வித்தையை விஞ்ஞான முறைப்படி விளக்கிவைத்ததாக ஒருகாலத்தில் எண்ணப்பட்டபடியால்மெஸ்மரிசமென்று வழங்கப்பட்டது. மெஸ்மர் இந்த நடவடிக்கைகளுக்கு ஒரு சக்தி காரணமென்றுகூறிவந்தார். இது அவருடையயோசனையேயொழிய மெய்ஞ்ஞானமல்ல. இந்தச் சக்தியைப் பார்த்தவருமில்லை, பரீட்சித்தவருமில்லை. இந்தப் புதிய மனுஷ சக்தி மனித காந்த சக்தி என்று வழங்கப் பட்டது. இது வெறும் உத்தேசமாக முடிந்தது. மனிதனுக்குள் காந்த சக்தியொன்று இருப்பதாகத் தெரியவில்லை. இந்த. இப்நாடிச மயக்கத்தில் செய்யும் நடவடிக்கைகளுக்கு உசாவுதலே அல்லது தூண்டுதலே போதுமான காரணமென தற்போது விஞ்ஞானிகளால் எண்ணப் படுகிறது. இதனைச் சற்று விளக்குவோம்.

விழிப்பில் நாயை 'வுஸ்' 'வுஸ்' என்று உசாவினால் ஓடுகிறது. மனிதனை அடி யென்றாலும், சுடு என்றாலும் (அடி என்றோ சுடு என்றோ வார்த்தைகளால் கூறாமல் வெறும் உசுப்பினாலேயே, சைகளாலேயே சொன்னாலும்) இந்த உசுப்பினாலேயே அடிக்கின்றான். சுடுகின்றான். இந்த நடத்தைகள் விழிப்பில் உசாவுதலால் காட்டும் நடத்தையாகும். அது போலவே ஓர்வித தூக்கத்தில் அதாவது இப்நாடிச தூக்கத்தில் அதாவது மயக்க தூக்கத்தில் உசாவினால் அந்த தூக்கத்திலுள்ளவன் செய்யச் சொன்னதையும், சொல்லச் சொன்னதையும், ருசிக்கச் சொன்னதையும் செய்கின்றான், சொல்லுகின்றான், ருசிக்கின்றான். இந்த மயக்கத்தில் விழிப்புக்குரிய நடத்தைகள் இல்லாதபடியால் உசாவிய சொல்லுக்குரிய நடத்தைகளைக் காட்டுகின்றான். சாதாரண விழிப்பில் சர்க்கரை என்றால் அதற்குரிய ருசியின் ஞாபகம் உண்டாகின்றது. அது போலவே இப்நாடிச மயக்கத்தில் மண்ணை வாயில்போட்டு சர்க்கரை என்றாலும் சர்க்கரைக்குரிய ஞாபகம் உண்டாகிறது. விழிப்பில் ஞாபகத்துக்கு வராத விஷயங்களும், இந்த மயக்கத்தில் ஞாபகத்துக்கு வருகிறது. மறந்துபோன விஷயங்களும் இந்த இப்நாடிச தூக்கத்தில் தோன்றுகிறது. விழிப்பில்தோன்றி மறைந்த விஷயங்களும் இந்தத் தூக்கத்தில் தோன்றி மறைவதுண்டு. ஒரு சிறு பெண், குழந்தையாய் இருந்த காலத்தில் யாரோ ஒருவர் சமஷ்கிருத பாஷையையோ, அராபிக் பாஷையையோ லத்தீன், கிரீக்கோ, ஈபுருவோ, அவள் அருகாமையில் படித்து வந்தார். அவள் காதுமூலமாகக் கேட்டிருந்த சொற்கள் அவள் மனதில் அவளுக்குத் தெரியாமலே படிந்திருந்தன. அவள் அனேக வருஷங்கட்குப்பிறகு இந்த மயக்கத்தில் அல்லது வலியில் தான் இளமையில் கேட்ட பாஷையை உச்சரிக்க ஆரம்பித்தாள். இவள் ஆதிவாழ்வை அறியாதார் இது என்ன விந்தை என்று அதற்குத் தகுந்த கதைகளைக் கட்டுகின்றார்கள். அவள் முன் ஜென்மத்திற் படித்த பாஷையைப் பேசுகின்றாள்; அல்லது பேய் பாஷையை உளறுகிறாள், என்று கதைகளைக் கட்டுகின்றார்கள். விஷயங்களை உள்ளதை உள்ளபடி விசாரித்துணராமையால் பேய்க் கதையும், பிசாசுக்கதையும், மறுஜன்மக்கதையும் அவைகளுக்குப் பரிகாரமாக மந்திர தந்திரங்களும் எழுகின்றனவே தவிர வேறு இவற்றில் எல்லாம் சிறிதும் உண்மை கிடையாது, இருக்க முடியாது என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்து மொழிய ஆசைப்படுகின்றேன்.

காணாத பொருளைக் கண்டுபிடிக்கும் கதையிலும், விழிப்பில் ஞாபகத்திற்கு வராத விஷயம் இப்நாடிசத்தில் அதாவது மயக்கத்தில் ஞாபகத்திற்குவரும் விஷயமே காரணம்.

இந்த இப்நாடிச மயக்கம் பிறரால் உண்டாகும். அல்லது தானே வரவழைத்துக் கொள்ளலாம். இந்த மயக்கத்திலுள்ளவர்கள் தெரியாத விஷயங்களைத் தெரிந்து சொல்வதாகவும், செத்தவர்களுடன் பேசுவதாகவும், பிறர் நினைத்த விஷயங்களைத்தான் சொல்வதாகவும், கண்ணுக்கெட்டாத தூரத்தில் நடக்கும் சம்பவங்களைத் தூர திருஷ்டியால் பார்த்துச் சொல்வதாகவும் இதுபோன்ற அபூர்வக்கதைகள்பலவுண்டு. இவைகளை எல்லாம் விசாரிக்குமளவில், சில, கேள்விச்சொல்லாகவும் சில பொய்யாகவும் சில மிகைப்படுத்திய விஷயமாகவும் மற்றும் சில சாதாரணமாக அறியக்கூடியதாகவும் ஏற்படுகின்றன.

இப்நாஷிஸ் என்ற மயக்கத்தில் விழிப்பில் நடக்கும் நடத்தைகள் இல்லாமையால் சில புலன்கள் நுட்பமாகவும், துரிதமாகவும், சுறுசுறுப்பாகவும் வேலைசெய்கின்றன. மெதுவாகப் பேசினாலும் கேட்கின்றன. சிற்சில சைகைகளையும் அறிகின்றன. இத்தியாதி நுட்ப துரித குணங்களை புலன்கள் இப்னாஷிஸ் என்ற மயக்கத்திலும் டிரான்ஸ் என்ற மயக்கத்தினாலும் அடைகின்றபடியால், சாதாரணமாய் விழிப்பில் நமது புலன்களுக்கு எட்டாத விஷயங்கள் இப்நாஷிஸ் அடைந்தவர்களுக்கு எட்டுகின்றன. குறிசொல்லுகிறவன், தானே இந்த மயக்கத்தை வரவழைத்துக் கொண்டு கேள்வி கேட்போருடைய சைகைகளை நுட்பமாய் அறிந்து கொண்டு, தானே, தன் மனதில் கண்டறிந்தவன் போல அந்தக் கேள்விகளுக்குத் தகுந்த விடை அளிக்கின்றான். இந்த மயக்கத்தில் தான் மீடியம் என்று வழங்கும் குறி சொல்வோர் ஜனங்களை மயக்குகின்றார்கள்.

இப்நாஷிஸ் மயக்கத்தில் சில நோய்கள் தீருவதாகச் சொல்கின்றார்கள். சாதாரணத் தூக்கத்தில் ஆபாசம், இளைப்பு, தலைவலி, மயக்கம், போதை முதலிய கஷ்டங்கள் நீங்குவதுபோல் இப்நாஷிஸ் தூக்கத்திலும், சில நரம்புபற்றிய நோய்கள், தீரக்கூடும். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இந்த மயக்கத்தில் உசுப்பால் சில நோய்கள் தீருகின்றன; ஒழுங்கு அறிவுள்ள சில நரம்புகள் உசுப்பால் ஒழுங்கடைகின்றன. ஒழுங்கடையவும் அந்த நோய் தீருகின்றது. இதனை அறியாமல் மந்திரத்தால் தீர்ந்ததாகப் பாமரமக்கள் நினைக்கின்றார்கள். இதோடு போகாமல் பூசாரியின் பணத்தை தோசத்திற்குட்பட்டு பூசையும் படையலும், போட்டு வீண் விரயம் செய்கின்றனர். பூசாரி செய்வதெல்லாம் உசுப்பே. இதனால் சிலருக்கு சில நோய்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமானாலும் சொல்லலாம். அதை எவரும் மறுக்க முடியாது.

தற்போது உலகில் மற்றொரு மகாயுத்தம் வருமா? வராதா? என்பதே எங்கு பார்த்தாலும் பேச்சாகவும், முக்கியமான பிரச்சினையாகவுமிருக்கிறது. இன்று என்னைப் பேசும்படிச் சொன்ன வானொலி நிலையத் தலைவர் நான் பேசத் தொடங்கும் முன்னர் இதைப்பற்றிப் பேச வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். காரணம் மக்கள் அதைப் பற்றிக் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டனராம். நாளை உலகத்தைப்பற்றி நான் பேச வந்திருக்கும்போது யுத்தம! யுத்தம்!! என்று எங்கும் பேச்சாக இருக்கும் விஷயத்தைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடுவது சாத்தியமானதா? வருங்கால உலகத்தைப் பற்றி யோசிக்கும்போது யுத்தம் என்கிற பயங்கர பூதம் குறுக்கே நம் மனக்கண்முன் நின்று நம்மைப் பயமுறுத்துகிறது. இதை எப்படி மறந்துவிட்டு வேறு விஷயத்தை யோசிப்பது? ஆகவே வருங்கால உலகத்தின் அடிப்படை இந்த யுத்தப் பிரச்சினையைப் பொருத்தே யிருக்கிறது. அதைப்பற்றிக்கேட்கவோ, அன்றி யோசிக்கவோ இன்று நீங்கள் மறுத்தாலும் பிற்காலத்தில் அனுபவிக்கப்போவது நீங்கள்தான். எக்கேடாவது கெட்டுப்போகட்டும், நீங்கள் அதைப்பற்றிப் பேசவேண்டாம், நாங்கள் கேட்கப் பிரியப்படவில்லை என்று நீங்கள் சொல்லுவதால் நான் அதைப்பற்றிப் பேசிப்பயனில்லை. ஆகவே நாம் அந்தப் பயங்கர யுத்தப் பிரச்சினை உலகத்தில் இல்லை என்று தற்காலீகமாகப் பாவித்துக்கொண்டு அதாவது உலகில் இனி யுத்தமே கிடையாது என்று நினைத்துக்கொண்டு வருங்கால உலகத்தைப் பற்றி யோசித்துப் பார்ப்போம்.

உலகில் செய்யப்படவேண்டிய செயல்கள் எண்ணிறந்தன நம் முன்னே கிடக்கின்றன. அப்படிச் செய்யப்பட வேண்டிய பல திறப்பட்ட செயல்களில் எனக்குத் தலைசிறந்ததாகவும், மேலானதாகவும் காணப்படுகிற சிலவற்றை உங்களுக்கு எடுத்துக்காட்டப் பெரிதும் விழைகிறேன். ஏனென்றால், நமது பேரன்மார் காலத்துக்குள் யுத்தப் பிரச்சினை தீர்ந்துபோய் விடும் என்று வைத்துக்கொண்டு பேசுவதானாலும் மனிதவர்க்கத்தைச் சின்னாபின்னப் படுத்தி வாட்டி வரும் மற்றொரு பெரும் பிரச்சினையுளது. அது எது? அதுதான் **பொருளாதாரப் பிரச்சினை**.

உலகில் மக்கள் இன்று இல்லாமையினால் படும் கஷ்டங்களைப் போல் என்றும் பட்டதாக எனக்குத் தெரியவில்லை. நாம் அனைவோரும் இன்று கெட்டகாலத்தில் அகப்பட்டு அவஸ்தைப்படுகிறோம். ஆசியாவில் மாத்திரமல்ல, ஐரோப்பாவில் மாத்திரமல்ல, அமெரிக்காவில்கூட உலகில் யாங்கணும் இந்தக்கஷ்டம் இருந்தே வருகிறது. இந்தப் பொருளாதாரத் தொல்லை இல்லாத இடம் கிடையவே கிடையாது. வேலையற்றுத் திண்டாடும் மக்களின் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகிறது. அந்தோ என்ன செய்வதென்று புலப்படாமல் திகைத்து நிற்கின்றனர். மேல்படியில் உள்ள 'அதிர்ஷ்டசாலிகளாகக் கருதப்படும் செல்வர்கள் நிலைமையும் கஷ்டத்தில்தான் இருக்கிறது. எப்படி எனில், வியாபாரமில்லையே! முதலுக்கே மோசம் வருகிறதே! முன்போலக்கவலையின்றி இருக்கமுடியவில்லையே! என்று விசனத்திலாழ்ந்து கிடக்கிறார்கள். சகல தொழில்களும் சலனமற்று ஸ்தம்பித்து நிற்கின்றன. வியாபாரப் பொருள்கள் யாவும் விற்பனையின்றித் தேங்கிக்கிடக்கின்றன. எங்கும் சாவுகுறி! எங்கும் ஓலம்!! என்ன செய்வதென விளங்காது நாமனைவோருமே மயங்கி விழித்துக் கொண்டிருக்கிறோம். இத்தன்மைத்தான நிலைமை ஏன் உண்டாயிருக்கிறதென்பது கலங்கிக் கிடக்கும் நம் மூளைகளுக்கு விளங்கவில்லை. இந் நிலைமை இனி நம்மை என்ன நிலைமைக்குக் கொண்டு போய்விடுமென்று நம்மால் அறிய முடியாமல் ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இது ஓர் மோசமான நிலைமைதான்.

ஆனால் ஒன்று. இன்றைய தினம் உலகில் ஒவ்வொரு உயிரும் கவலையின்றி வாழப் போதுமான அளவுக்கு மேலாகவே பொருள்கள் குவிந்துகிடக்கின்றன. உணவுப்பொருள்களுக்குக் குறைச்சலா? உடைகளுக்குக் குறைச்சலா? இரும்பு இல்லையா? எஃகு இல்லையா? தகரம் இல்லையா? எது இல்லை? எல்லாமிருக்கிறது. அளவுக்கு மீறியுமிருக்கிறது. மனிதனுக்குத் தேவையான யாவும் தேவைக்கு மீறி மிஞ்சியுமிருக்கிறது.

இங்கு இப்படி யிருக்க பாருங்கள், அப்பக்கம் என்ன கோரக் காட்சி! என்ன மானக்கேடு!! என்ன அலங்கோலம்!!! கோடிக்கணக்கான, எண்ணிலடங்காத மக்கள் 'ஐயோ பசி', 'ஐயோ பசி' 'உடை', 'உடை' என்று ஓலமிடுகின்றனர். உணவுப் பொருள்களை வாங்க, உடை வாங்க கையில் செல்லாக் காசுமில்லை, வேலை யில்லை, வேலை யிருந்தும் போதுமான கூலியில்லை. அவர்களுக்குத் தேவையான பொருள்கள் கண் முன் குவிந்து கிடந்தும் அவர்கள் தொடமுடியாத நிலைமை. என்ன விந்தை!

ஒரு பக்கம் அளவுகடந்த உற்பத்தி, மறுபக்கம் கட்டுக் கடங்காத தேவை—இதுதான் ஆச்சரியமான காட்சி.

உற்பத்தியையும், தேவையையும் ஒன்றுபடுத்த முடியாத திகைப்பு. இன்று தொழிலும், வர்த்தகமும் பித்துபிடித்துத் தடுமாறும் நிலைமை இதுதான்.

இப்படிப்பட்ட மோசமான நிலைமையிலிருந்து மக்களை விடுவிக்க நான் ஏதோ பரிகாரம் கண்டுபிடித்துத் தயாராக வைத்திருப்பதாக நீங்கள் நினைத்துவிட வேண்டாம். ஆனால் இதற்குப் பரிகாரம் இல்லாமலில்லை என்றுதான் இன்று உங்களுக்குக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பரிகாரம் இன்றில்லாவிடில் நாளை கட்டாயம் கண்டுபிடிக்கப்படும். நானெடுத்துக்கொண்ட விஷயமான நமது பேரன்மாருலகத்தைப்பற்றிப் பேசுவதற்குமுன் மேற்சொன்ன பரிகாரம் எப்படியிருக்க வேண்டுமென்று அதன் சாயலை எனக்குத் தெரிந்ததை ஒருவாறு சொல்ல விரும்புகிறேன்.

இன்று இவ்வுலகம் இந்த அகோரமான நிலைமையில் இருப்பதன் மூலகாரண மென்ன?

மிகவும் குறைவான ஆட்களைக் கொண்டு மிகவும் அதிகமான பொருள்களை மிகவும் குறைந்த காலத்தில் உற்பத்தி செய்யக் கூடிய ஆற்றல் பெற்றுவிட்டோம்.

(9-ம் பக்கம் பார்க்க)

உரையாடல் :

# அவசரம், மிக அவசரம்!

[சித்திரபுத்திரன்]

**சுயமரியாதைக்காரன் :—** ஐயா தாங்கள் இவ்வளவு அவசரமாக எங்கு சென்றுவிட்டு வருகிறீர்கள்?

**புராணமரியாதைக்காரன் :–** எங்கும் இல்லை. ஒரு இடத்தில் கொஞ்சம் கடன் கேட்டிருந்தேன்; அதற்காகப் போய்விட்டு வருகிறேன்.

**சு. ம:** தங்களுக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியமென்ன? தங்கள் பிள்ளைகள் எவ்வளவோ நல்ல நிலையில் இருக்கும்போது நீங்கள் கூடவா கடன் வாங்கவேண்டும்?

**பு. ம:** நான் யாத்திரை போகப்போகிறேன்; அதற்காகப் பணம் வேண்டும். பிள்ளைகளைக்கேட்டால் கொடுக்கமாட்டான்கள்.

**சு. ம:** இப்பொழுது என்ன யாத்திரை வந்தது தங்களுக்கு?

**பு. ம:** கொஞ்ச காலமாகவே எனக்குக் காசிக்குப்போக வேண்டும் என்கின்ற அவா; கடவுள் செயலால் அது இப்போதுதான் முடிந்தது. ஆதலால் காசிக்குப்போகிறேன்.

**சு. ம:** என்ன அய்யா இது அதிசயமாய் இருக்கிறது! இந்தப் பண நெருக்கடியான சமயத்தில் கடன் வாங்கிக்கொண்டு காசிக்குப் போகிறேன் என்று சொல்லுகிறீர்களே! அப்படி என்ன அவசரம் வந்துவிட்டது?

**பு ம:** ஒரு அவசரமும் புதிதாய் வந்து விடவில்லை; இந்தப் பாழாய்ப்போன சுயமரியாதை இயக்கம் வந்து நம்ப பிள்ளைகளையெல்லாம் கெடுத்து விட்டது. அதனால்தான் நான் இவ்வளவு கஷ்டத்துடன் காசி யாத்திரை வைத்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

**சு. ம:** சுயமரியாதை இயக்கத்துக்கும் தாங்கள் காசிக்குப் போகவேண்டியதற்கும் என்ன சம்பந்தம்?

**பு. ம:** சம்பந்தம் என்னவென்று கேட்கிறீர்கள்? நானோ வயது முதிர்ந்த கிழவன்; எனது உடல் நிலை மிகவும் மோசமாய் இருக்கிறது; எந்தச் சமயத்தில் பகவான் தனது திருவடி நிழலுக்கு அழைத்துக் கொள்வாரோ தெரியவில்லை. ஒரு சமயம் அந்தப்படி ஏதாவது திடீர் என்று ஏற்பட்டு விட்டால் என்னுடைய பிள்ளைகள் எனக்குச் செய்யவேண்டிய சாமக்கிரியைகளையெல்லாம் செய்வார்களா? திதி செய்வார்களா? எள்ளுந்தண்ணீரும் இறைப்பார்களா? பிண்டம் போடுவார்களா? நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்! இந்த நாசமாய்ப் போன சுயமரியாதைக்காரர்களால் எவ்வளவு அநியாயங்கள் ஏற்பட்டு விட்டன பாருங்கள்.

**சு. ம:** அதைப்பற்றிச் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம்; இதற்காக காசிக்கு ஏன் போக வேண்டும் என்று கேட்டால் அதற்கு ஒன்றும் சொல்லாமல் சுயமரியாதைக்காரர்களையே சும்மா வைகின்றீர்களே!

**பு ம:** இதற்காகத்தான் காசிக்குப் போகிறேன். இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு மனிதன் காசியில் போய் இறந்து விட்டால் அவனுக்கு யாரும் திதி பண்ணினாலும், பண்ணாவிட்டாலும், பிண்டம் போட்டாலும் போடாவிட்டாலும், அவன் கவலைப்பட வேண்டியதில்லை. காசியில் இறந்தாலே மோக்ஷம் கிடைத்து விடும். இதில் ஏதாவது கொஞ்சம் நஞ்சம் சந்தேகம் இருப்பதானால் கயாவுக்குப் போய் நமக்கு நாமே பிண்டம் போட்டுக்கொண்டு சிரார்த்தம் செய்து கொள்ளலாம்; வேறு எவனும் போட வேண்டுமென்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆதலால் நான் இங்கிருந்து நேரே கயாவுக்குப் போய், அங்கு எனக்கு நானே சிரார்த்தம் செய்து கொண்டு பிறகு காசிக்குப்போய் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கப் போகிறேன்.

**சு. ம:** அப்படியானால், தாங்கள் சொல்லுவதைப் பார்த்தால் மற்படியும் இங்கு திரும்பி வரமாட்டீர்கள்போல் தோன்றுகிறதே!

**பு. ம:** ஆம்! ஆம்!! இனி எனக்கு இங்கு என்ன வேலை? கடவுள் கிருபையால் நான் பாடுபட்டு எவ்வளவோ ,சம்பாதித்தேன். பகவான் • எனக்கு யாதொரு குறையும் வைக்கவில்லை. எல்லாவற்றையும் இந்தப் பிள்ளைகளுடைய படிப்புக்கும், கலியாணத்துக்கும், மற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

29—1—49 சனிக்கிழமை

## அடுத்த தேர்தல்!

**அடுத்த தேர்தல்!**—இவை, சர்வ சாதாரணமான இரண்டு சொற்கள், நமக்கு! ஆனால் சர்வ வல்லமை பொருந்திய காங்கிரஸ் சர்க்காருக்கும், அந்த சர்க்காரைத் தாங்கி நிற்கும் உரிமையும் கடமையும் படைத்த காங்கிரஸ் கட்சிக்குமோ, இச்சொற்கள், அவற்றின் இருதயத்தைக் குத்திப் பிளக்கும் கூரிய ஈட்டி முனைகள்!

**அடுத்த தேர்தல்!**—இந்த வாசகத்தை எண்ணும்போது திராவிடர் கழகம் என்னும் மக்கள் மன்றத்திலே மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் உலவும் நமக்கு அச்சமோ ஆச்சரியமோ உள்ளக் குமுறலோ உதட்டெரிச்சலோ பிறப்பதில்லை. மாறாக, நம் முகத்திலே ஒரு இலேசான புன்னகையும், நம் உளத்திலே சிறிதளவு மகிழ்ச்சியும்தான் தோன்றுகின்றன. நம் புன்னகைக்குக் காரணம், காங்கிரஸ்காரர்கள் உள்ளத்திலே அடுத்த தேர்தல் என்னும் எண்ணம் தரும் கிலி! நம் மகிழ்ச்சிக்குக் காரணம், மக்கள் உள்ளத்திற்கு 'மங்களகரமான' மஞ்சள்பெட்டியின் மகத்துவத்திலே முன்பிருந்த நம்பிக்கை, கொஞ்சம் கொஞ்சமாக, தேய்ந்துவருகிறது, விரைவில் அது முற்றிலும் மறைந்துவிடும், காங்கிரஸை ஒழிப்பதே இனி நம் வேலை என்று மக்கள் அனைவரும் முழக்கமிடும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்பதற்கான அறிகுறிகள் எங்கெங்கும் தோன்றிவருவது! நமக்கு இவ்வண்ணம் இலேசான புன்னகையையும் சிறிதளவு மகிழ்ச்சியையும் தரும் இதே வாசகம்தான் தேசியவாதிகளுக்கு வேம்பு எனக் கைக்கிறது, விஷம் என அதை வெறுக்கின்றனர் அன்னார்! தேர்தல என்ற சொல்லைக் கண்டால், தேர்தல் வருகிறது என்று யாராவது பேசக் கேட்டால், தேர்தல் பற்றிய எண்ணத்தை எவரேனும் எப்போதேனும் எதற்கேனும் எழுப்பினால் முன்னர் எல்லாம் "அன்றலர்ந்த தாமரை"யென மலர்ந்த அவர்கள் முகம் இப்போது, "மழை காணாப் பயிர் போல" வாடி வதங்குவது சர்வ சாதாரணக் காட்சியாகிவிட்டது.

**அடுத்த தேர்தல்!**—நிச்சயமாக நாம் அதிலே கலந்து கொள்ளப் போவதில்லை! நம் கட்சியின் சார்பிலே எவரும் எந்த எம். எல். ஏ. பதவிக்கும் போட்டி போட முடியாது! சட்டசபைக் கதவுகளைத் தட்டுவது என்பதோ, உள்ளே நுழைந்து, அந்த அழகிய பீடங்களில் அமர்ந்து ஆளவந்தார்களாக மாறுவது என்பதோ, மந்திரி சபையை அமைத்து மாகாண சர்க்காராக மாறி ஆதிக்கவாதிகளாக ஆவதென்பதோ நம்முடைய திட்டமல்ல நாம்—நாம் என்றால் திராவிடக் கழகத்தவர்கள், நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், சேலம் மாநாட்டின்போது, திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டிருக்கிறோம் இனிக் கொஞ்ச காலத்திற்கு, திராவிடர் கழகம், தேர்தலிலே தலையிடாது—சட்டசபையிலே நுழையாது—மந்திரி சபை பற்றி நினையாது என்பவற்றை! ஆகவே எவரும் அடுத்த தேர்தலில் திராவிடர் கழகம் தலையிட்டால் என்ன ஆகுமோ, நம் அதிகார பீடம் பறிபோகுமோ, நாடாளும் உரிமை அந்தக் "கருஞ்சட்டைகள்" கைவசம் மாறுமோ என்றெல்லாம் அஞ்சத் தேவையில்லை—திராவிடர் கழகம் தேர்தலுக்கு நிற்கப் போவதே கிடையாது! அஞ்சத் தேவையில்லை, அச்சம் துளியளவும் தேவையில்லை! ஆனால் காங்கிரசும் காங்கிரஸ் சர்க்காரும் அஞ்சுகின்றனர், அவர் அச்சம் சிறு குன்றளவுகூட அல்ல இமயமலையளவு வளர்ந்து நிற்கின்றது!

**அடுத்த தேர்தல்!**—அதை எண்ணும்போதே அச்சம், ஆளவந்தார்களின் நெஞ்சை உலுக்குகிறது! காரணம், தன்வினை தன்

னைச் சுடும் என்னும் வாசகத்தின் முழுப் பொருளையும் அவர்கள் நன்குணர்ந்திருப்பதுதான்! அடுத்த தேர்தல் வரும்போது, அவர்கள், மக்களைக் கண்டல்லவா "ஓட்டு" கேட்கவேண்டும்! அது அவர்களால் ஆகிற காரியமா, அப்படித்தான் அவர்கள் மக்களிடம் நேரிற் சென்றால் என்ன சொல்லி ஓட்டு கேட்க முடியும்? "ஆண்டோம் ஐந்து ஆண்டுகள் அரசபோகத்தில் இருந்த வண்ணம்! ஆனால் மக்கள் துன்பக் கடலிலே மிதந்தது கண்டு எங்கள் ஆதரவு எனும் சிறு படகையும் அனுப்பினோமில்லை, ஆகவே எங்கட்கு ஓட்டு தாருங்கள்" என்று சொல்லிக் கேட்க முடியுமா? அல்லது, "அளவரிசியைத் தந்தோம், அதுவும் மக்கி மடிந்த நாற்றம் மிகு "நல்"லரிசியைத் தந்தோம். அதுவும் உயிரை உடலிலே பொருத்தி வைப்பதற்கு மட்டும் தேவைப்பட்ட ஆறு அவுன்ஸ் என்னும் அளவுங்கே தந்தோம், அதுவும் பல வாரங்கள் பல வட்டாரங்களில் தந்தோமில்லை, ஆகவே எங்களை மீண்டும் ஆளவந்தார்களாக ஆக்குங்கள்' என்று சொல்லிக் கேட்க முடியுமா? இல்லை, "சுழல் துப்பாக்கி கொண்டு பெண்கள் என்றும் பாராது இளம் குழந்தைகள் என்றும் பாராது குடும்பம் குடும்பமாக பக்கிங்காமில் தொழிலாளரைச் சுட்டுச் சுட்டுத் தள்ளினோம், குண்டாந் தடியடி கொண்டு உரிமைக்காகப் போராடிய உத்தமர்களை குடந்தை நகரில் குடல் நடுங்க அடித்தோம், வேண்டாத இந்தியை எதிர்த்துப் போரிட்ட வீரர்களை பட்டப் பகலில் பச்சைரத்தம் பரிமாறச் செய்தோம், கோவை முதலாளிகளை மகிழ்ச்சி செய்ய தொழிலாளர் தலைவர்களை ஆண்டுக் கணக்கில் விசாரணையின்றிக் காவலில் தள்ளினோம், சர்க்கார் ஊழியர்களை அடக்கி ஒடுக்கி கண்ணீர்ப் புகையால் மிரட்டி மடக்கி நிறுத்தினோம், இவ்வளவும் செய்தோமே ஆகவே எமக்கு உங்கள் புனிதமான வாக்குரிமையை அளியுங்கள்" என்று சொல்லி கேட்பரா? அல்லது, "செந்தமிழர்தம் எழுச்சிக் குரல்போலும் இராவண காவியத்தைப் பறிமுதல் செய்தோமே, புரட்சிக்கவிஞரின் புதுக் குயிலைக் கூவாதே என்று தடுத்துப் போட்டோமே, சீர்திருத்த நாடகங்களை, ஏடுகளை, போர்வாளை, "சர்வாதிகாரி"யைத் தடுத்தோமே, இவ்வளவு அரும்பெரும் பணிகளை ஆற்றிய எம்மையன்றி வேறு யாரை நீர் தேர்ந்தெடுக்கலாகும்?' என்று சொல்லி ஓட்டு கேட்பரா? எதைக் காட்டி, அவர்கள் செய்த எந்த அரும் பணியை முன்னிறுத்தி, தேர்தல் நாளன்று, மக்களை தைரியமாகச் சென்று காணமுடியும் அவர்களால்? அவர்களைக் காணும்போது, மக்கள் உள்ளத்திலே, அவர்கள் ஆட்சியின் பயனாக விளைந்த அடக்குமுறையாலே, குருடான கண்கள், நொறுங்கிப் போன தலைகள், குருதி கொட்டிய கரங்கள், எலும்பு முறிந்த கால்கள், அறுந்து வீழ்ந்த நரம்புகள், சிறையில் கிடந்த உருவங்கள், தடியடித் தழும்பு நிறைந்த மார்புகள், இரத்தக் காயம் தோய்ந்த முதுகுகள்—இவைதானே வரிசை வரிசையாக நிழலாடும்! மக்கள் உள்ளத்திலே இந்தச் சோக சித்திரங்கள் நிழலாடுமானால் இந்தச் சித்திரங்களை உருவாக்கிய தேசிய தீரர்கட்கு மறுபடியும் ஆட்சிப் பீடம் தர இசையுமா அவர்கள் உள்ளம்? இதை அறியாரா தேசீயவாதிகள்? அறிவர், மிக நன்றாக அறிவர், முற்பகல் செய்யின் பிற்பகல் விளைவது உறுதி என்பதைத் தெளிவாக அறிவர்! தாம் தினை விதைத்ததால் தினையைத்தான் அறுக்கவேண்டும் என்பதை தாம், அடக்குமுறையை அளவின்றி ஓச்சியதால் மக்களிடமிருந்து எதிர்ப்புப் புயல்தான் எழுமே தவிர போற்றுதல் அந்தாதி தோன்றாது என்பதை, மக்கள் உள்ளம், தம்மை, தம் கொடுமையை, தம் கோலாகல வாழ்வை, மறக்காது, மன்னிக்காது, ஒருபோதும் மன்னிக்காது என்பதை அவர்கள் நிச்சயமாக அறிவர்! அறிவர்! அறிந்ததால்தான் அடுத்த தேர்தல் என்றதும் அவர்கள் நெஞ்சு நடுங்குகிறது!

**அடுத்த தேர்தல்!— ஆம்! அது என்ன ஆகுமோ, அதன் முடிவு எப்படி இருக்குமோ, என்ற திகில், கிலி, அச்சம், பயம், நடுக்கம் அவர்களை இரவும் பகலும் பிடித்து ஆட்டுகிறது. எனவேதான் திராவிடர் கழகம் ஓய்வுசாய்வின்றி பலத்த எதிர்ப்புக் கிடையே நிகழ்த்திவரும் சமுதாய சீர்திருத்தப் பணியும், பொரு**

(12-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சடங்குகளுக்கும் நன்றாய்ச் செலவு செய்தேன். அவர்கள் நல்ல நிலைமைக்கும் வந்தார்கள்; கடைசியாக இந்தச் சுயமரியாதைக்காரன்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, அவன்கள் பெற்ற தாயாருக்கே திதி, திவசம் ஒன்றும் கொடுப்பதில்லை. வீட்டிலோ ஒரு நாள்-கிழமை பண்டிகை என்பவை எதுவுமே இல்லை. இப்படிப்பட்டவன்கள் எனக்குத் திதி செய்வான்களா? எள்ளும் தண்ணீரும்கூட இறைக்கமாட்டான்களே! கொள்ளிகூட வைக்கமாட்டான்களே! ஆதலால் இங்கே இருந்து இறந்து கருமங்கள் செய்யப்படாமல் என் ஆத்மா நரகத்துக்குப் போய் அவஸ்தைப்பட்டு, நாய், கழுதையாய்ப் பிறப்பதை விட, காசியில் போய் இறந்துவிட்டால் ஒரு பயனுடைய தயவுகூட இல்லாமல் மோக்ஷம் கிடைத்துவிடும் என்பது உறுதி.

அன்றியும் அவனவன் வந்த காரியத்தைப் பார்க்க வேண்டாமா? எவ்வளவு காலத்துக்குத்தான் இந்தப் பூலோகத்தில் இருந்தாலும் என்ன பயன்?

**சு. ம:** ஓ ஹோ! அப்படியா சங்கதி? மனிதன் என்ன பாவம் செய்தாலும், எவ்வளவு அக்கிரமம் செய்தாலும் திதி செய்யப்படுவதாலோ, காசியில் போய்ச் செத்துப்போவதினாலோ மோட்சத்துக்குப் போய்விடுவானாக்கும்!

அன்றியும் மனிதன் எவ்வளவு யோக்கியமாய் நடந்திருந்தாலும், எவ்வளவு புண்ணியம் செய்தவனாய் இருந்தாலும் அவன் இறந்துபோன பிறகு, அவனது பிள்ளைகளோ, சந்ததியார்களோ செய்த குற்றத்துக்காக (திதி செய்யாததற்காக) நரகத்துக்குப் போவதுடன், நாய், கழுதையாய்ப் பிறப்பானாக்கும்.

இது என்ன நீதி, என்ன சாஸ்திரம், எந்தக் கடவுளுடைய உத்திரவோ தெரியவில்லை! அதிருக்கட்டும், தாங்கள் எதற்காக இந்தப் பூலோகத்துக்கு வந்தீர்கள்? அது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே!

**பு. ம:** மனிதன் எதற்காகப் பிறந்தான்? ஸ்ரீமந் நாராயணனைப் பக்தி பண்ணவும், பூஜிக்கவும், அவன் பாதாரவிந்தம் அடையவும் தானே? இது கூடவா மனிதனுக்குத் தெரியாது?

**சு. ம:** அப்படியா? தாங்கள் நாராயணன் பாதாரவிந்தம் சேருவதற்கும், தங்கள் பிள்ளைகள் எள்ளும் தண்ணீரும் இறைப்பதற்கும், நீங்கள் கயாவுக்கும், காசிக்கும் போவதற்கும், காசியில் சாவதற்கும் எப்படி அய்யா சம்பந்தம் இருக்க முடியும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! சற்று விவரமாய்ச் சொல்லுங்கள்! நானும் தங்களுடனேயே புறப்பட்டு வருகிறேன். எனக்கு மாத்திரம் மோட்சம் வேண்டாமா நாராயணனுடைய பாதாரவிந்தம் வேண்டாமா?

**பு. ம:** இதெல்லாம் எவ்வளவு சொன்னாலும் உங்களுக்குச் சுலபத்தில் புரியாது.

**சு. ம:** பின்னை எப்படித்தான் புரியும்? அதன் இரகசியத்தைக் கொஞ்சம் சொல்லுங்களேன்! என் ஆத்மாவும் முக்தியடையட்டும்.

**பு. ம:** உங்களுக்குப் புரிய வேண்டுமானால் நல்ல குருகடாட்சம் வேண்டும். பெரியோர்கள் சாவகாசம் வேண்டும். முன்னோர்கள் நூல்களைப் பார்க்க வேண்டும். சாஸ்திரங்களில் பரீக்ஷை இருக்கவேண்டும். புராணங்களை மரியாதை செய்ய வேண்டும். பக்தி சிரத்தையுடன் அவைகளைப் படிக்க வேண்டும். எதற்கும் பிராப்த கருமம் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் அனுகூலமாக பகவான் கடாட்சம் இருக்கவேண்டும். இப்படிக்கெல்லாம் இல்லாமல் சும்மா ஒருவரைப் பார்த்து ஒருவர் ஆசைப்படுவதனாலேயே, முக்தி என்பது எல்லாருக்கும் கிடைத்துவிடக்கூடிய காரியமல்ல.

**சு. ம:** இப்போது எனக்கு ஆசை வந்துவிட்டது. நான் கொஞ்சம்கூட சுயமரியாதைக்காரர்களுடன் சாவகாசமே வைத்துக்கொள்வதில்லை. தாங்கள் சொன்னபடியே நடந்து நானும் நாராயணன் திருவடியை அடைந்தாகவேண்டும். தாங்களே எனக்கு நல்ல குருவாகவும், நேசத்திற்கேற்ற பெரியோராகவும் இருந்து உபதேசம் செய்யவேண்டும். மற்றபடி முன்னோர்கள் நூல்கள் என்றீர்களே! அவர்கள் எவ்வளவு காலத்துக்கு முன்னோர்களாயிருக்கவேண்டும்? அவர்களில் சிலருடைய பெயர்களையாவது சொல்லுங்கள்! அவர்களது நூல்களுடைய பெயர்களையும் சொல்லுங்கள்! அந்தப்படியே செய்யப்பார்க்கிறேன்.

பிறகு சாஸ்திரங்களில் பரீக்ஷை என்றால் என்னென்ன சாஸ்திரங்கள்? அவைகளை எப்படிப் பரீக்ஷிப்பது? தயவு செய்து அதையும் கடாட்சிக்க வேண்டும்.

புராணங்களை மரியாதை செய்வது என்றால் எப்படி மரியாதை செய்வது? விழுந்து கும்பிட்டால் போதுமா? அல்லது அவைகளில் உள்ள விஷயங்களை எல்லாம் அப்படியே

(10-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பெரிய அமெரிக்க வர்த்தகர் சொன்ன வார்த்தைகள் என் நினைவிற்கு வருகின்றன. அவ் வார்த்தைகளில் நமக்கு வேண்டிய பரிகாரம் இருப்பதை நான் பார்க்கிறேன்.

அவர் கூறியதாவது :—" இன்று நாம் அனைவோரும் சேர்ந்து மிகவும் சிக்கனச் செலவில் நேர்த்தியான பொருள்களை பெருவாரியாக உற்பத்தி செய்ய, அதாவது **கூட்டு உற்பத்தியைக்** கண்டுவிட்டோம். ஆனால் அதை நாமெல்லோரும் சேர்ந்து அனுபவிக்க (அதாவது **கூட்டாக அனுபவிக்க**) நம்மில் ஒருவராவது வழி கண்டாரில்லை. போனது போகட்டும். இனியாவது அதைப்பற்றி எண்ணிப் பார்க்கத்தொடங்குவோம்" என்று பொன்னேபோல் புகன்றுள்ளார்.

அந்தப்படிக்கே நாம் இப்போது சிந்திக்கத் தொடங்குவோம்.

அவர் **கூட்டு அனுபவிப்பு** என்று சொன்னாரே, அதன் பொருளென்ன? அவர் பெருங் கருத்துக்களை தம் மனதில் வைத்து இவ் வார்த்தையைக் கூறினதாக எனக்குத் தோன்றவில்லை. என்ரும் பெருவாரியான உற்பத்தியைச் சமாளிக்க இது பரிகாரமாய் இருக்கலாமோ என்று அசம்பாவிதமாகக் கூறியிருப்பதாகவே நினைக்கிறேன். ஆனபோதிலும், அவ்வார்த்தை கருத்துச் செறிவுள்ளதே. அதில் ஐயமில்லை. நமது பேரன்மார் காலத்தில் இவ் வார்த்தைக்கு மதிப்பேற்பட்டுவிடுவதாகவே வைத்துக்கொள்வோமாக, இந்த வார்த்தை, தற்காலம் நாம் படும் துன்பங்களைப் போக்கக்கூடிய ஓர் "மூலமந்திரமாகும்" திகழும் என்பதாக வைத்துக்கொண்டு, மேலே செல்லுவோம்.

கூட்டு உற்பத்தி என்றால் என்ன? உதாரணமாக ஒரு தனி மனிதன் ஓர் சிறு பட்டறையில் ஒரு மோட்டார் செய்ய ஆரம்பித்து ஒரு முழு ஆண்டு கஷ்டப்பட்டு உழைத்து, தன்னந்தனியாகவே பாடுபட்டு, பார்வைக்கு விகாரமாயும், நேர்த்தியற்றதும், விலை அதிகமானதுமான (கதர் போன்ற) மோட்டார் வண்டி செய்வதைப் போக்கி, ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுசேர்ந்து சுலபமாகவும், சிக்கனமாகவும், வெகு விரைவாகவும், நேர்த்தியாகவும் எண்ணிறந்த மோட்டார்களைச் செய்து முடிக்கும் விதம் தான் கூட்டு உற்பத்தி என்பதாகும்.

இக் காலத்தில் ஆகாரப் பொருள்கள் முதல் சவரக்கத்திகள் ஈருக எல்லாப் பொருள்களும் கூட்டு உற்பத்தியின் மூலமே செய்யப்பட்டு வருகின்றன. இது நீங்கள் எல்லோரும் அறிந்த மிகச் சாதாரண விஷயம்.

சரி. உற்பத்தியில் கூட்டுறவைக் கையாண்டதுபோலவே உற்பத்தி செய்த பொருள்களை அனுபவிப்பதிலும் இந்தக் கூட்டுறவை அப்படியே திருப்பிப் போட்டுப் பார்க்கலாம். எடை கட்டுமா என்று பார்ப்போம்.

ஒரு சிறு மனிதன் கஷ்டப்பட்டு சேமித்து தன் குடும்பத்திற்கென்று ஒரு சிறு வீடு கட்டிக்கொள்ளும் தன்னல மனப்பான்மையைப் போக்கி நாமெல்லோரும் ஒரு குடும்பம்—மனிதக் குடும்பம்—என்ற உணர்ச்சிபெற்று நமக்கெல்லோருக்குமாக ஒரு பெரிய, நவநாகரிக, கண்கவரத்தக்க, உன்னதமான, சுகாதாரமான நகரமொன்றை அகன்ற தெருக்களோடும், பூம்பொழில்களோடும், நாடக மேடைகளோடும், உண்டிச்சாலைகளோடும், பலதிறப்பட்ட தொழிற்சாலைகளோடும், இன்னபிற இன்றியமையாத தேவைகளோடும் கட்டுவதாக உங்கள் மனதில் சற்று எண்ணிப்பாருங்கள். இதில்தான் **கூட்டு அனுபவிப்பு** என்னும் வார்த்தையின் பொருள் முழுமையும் புதைந்து கிடக்கின்றது.

இதை சமூகம் முழுமையும் சேர்ந்து கூட்டுறவு மூலம் பொருள்களை வாங்குதல் என்றும் சொல்லலாம். கூட்டுறபத்தியால் விளைந்த பெருவாரியான வீடுகள், வீட்டுச் சாமான்கள், மோட்டார் வண்டிகள் முதலிய இப்பெரும் பொருள்களை "எப்படி ஐயா ஒரு சமூகம் வாங்க முடியும்"? என்று நீங்கள் கேட்கலாம்.

இதில் சமூகச் சிக்கல்களும், பொருளாதாரச் சிக்கல்களும் மலிந்து கிடக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அச் சிக்கல்களையும் அதன் பரிகாரங்களையும் நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. அதற்கான திட்டங்களை நான் இப்போது உங்களுக்குக் கொடுக்க வரவில்லை, அதைப்பற்றிக் குறிப்பாக இது போன்ற ஓர் அபிப்பிராயத்தை உங்களிடம் உண்டாக்கவே இப்போது வந்திருக்கிறேன். நம்முடைய பேரன்மார்கள் இவ்வுலகை நடத்தும் காலத்தில், இப்போது காணப்படும் கஷ்டங்கள், அவற்றைப் போக்குவதற்கான வழிகள், பரிகாரங்கள் ஏற்பட்டுவிடும் என்று மட்டுமே சொல்ல விரும்புகிறேன்.

இப்போது நாம்சிலபொருள்களை வாங்கும் விஷயத்தில் சமூகமாக சேர்ந்து வாங்கும் முறையைக் கையாளுகிறோம். இன்று வாங்கப்படும் பிரம்மாண்டமானயுத்தக் கப்பல்களும், மெஷின், பீரங்கிகளுக் எப்படி எதைக்கொண்டு வாங்கப்படுகின்றன தெரியுமா? நாம் எல்லோரும் நம் நம் தகுதிக்கும் சொத்து நிலைமைக்கும் ஏற்ற பற்பல வரிகளின் மூலம் சர்க்காருக்கு அவ்வப்போது சிறுகச் சிறுகத் தந்த பணத்தைக் கொண்டல்லவா? ஆகாயக் கப்பல்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும், பீரங்கிகளையும் சமூகக் கூட்டுறவினால் வாங்கி வைத்திருக்கிற நாம் அழகிய ஓர் நகரத்தை அதே கூட்டுறவினால் ஏன் வாங்கி அனுபவிக்க முடியாது? உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் தேவையான உண்டி உடை முதலியவைகளையும் ஏன் அவ்விதமே சம்பாதித்துக்கொள்ள முடியாது? கட்டாயம் முடியும். மக்கள் ஒன்றுபட்டால் முடியாத காரியமும் உலகில் உண்டா? சமூகக் கூட்டுறவால் உற்பத்தி செய்த பொருள்களை சமூகக் கூட்டுறவின் மூலம் மிக எளிதாக வாங்கி சமூகம் முழுமையும் கவலையின்றி அனுபவிக்கலாம்.

இதை நெஞ்சில் நிறுத்துங்கள்.

எது எப்படி இருந்தபோதிலும் நம்முடைய பேரன்மார் காலத்தில் யுத்தப் பிரச்சினை தீர்ந்து சமாதான உலகம் நிலவும், பொருளாதாரச் சிக்கல்களும் நீக்கப்பட்டு சாந்தம் ததும்பி எழும் என நம்புகிறேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

## அவசரம், மிக அவசரம்!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பி ஆகவேண்டுமா? மற்றும் பக்தி சிரத்தையோடு படிக்க வேண்டும் என்றால் பணம் கொடுத்து வாங்கி, குளித்து முழுகிவிட்டுப் புராணங்களுக்குத் தீபதூபம் வைத்து பூஜை செய்து நானே படித்தால் போதுமா? அல்லது வேறு யாருக்காவது பணம் கொடுத்துப் படிக்கவைக்க வேண்டுமா? என்பதையும் அருள வேண்டும்.

அன்றியும் எனக்குப் பிராப்த கர்மம் இருக்கிறதா இல்லையா என்பதை எப்படி அறிவது? இவ்வளவெல்லாம் பாடுபட்டும் பிராப்த கர்மம் இல்லாவிட்டால் எல்லாம் வீண் செலவாகவும், வீண் கஷ்டமாகவும் ஆகிவிடுமே! அது மாத்திரமல்லாமல், அதாவது பிராப்த கர்மம் இருக்கா—இல்லையா? என்று அறிவது மாத்திர மல்லாமல், பகவான் கடாக்ஷம் வேறு இருக்க வேண்டும் என்று முடிவாய்ச் சொல்லிவிட்டீர்களே! அதை எப்படித் தெரிந்துகொள்ளுவது? இதை அறியாமல் கடைசியாய்ச் செய்த காரியமெல்லாம் வீணாய்ப்போகும்படி விட்டுவிடக்கூடாதே என்கின்ற கவலை அடியேனுக்கு அதிகமாய் இருக்கிறது. ஆதலால் குரு சுவாமிகள் இவற்றையெல்லாம் கடாக்ஷித் தருளுவதுடன், தங்களுக்குப் பிராப்த கருமம் இருப்பதும், பகவான் கடாக்ஷம் இருப்பதும் எப்படித் தெரிய வந்தது? என்பதையும் அருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

பு. ம: சரி! சரி!! விளங்கிவிட்டது. நீரும் பக்காச் சுயமரியாதைக்காரன் என்பது நன்றாய் விளங்கிவிட்டது! அவன்களுக்குத்தான் இந்த குயுக்தியான பேச்சுகளும், போக்கிரித்தனமான பேச்சுகளும் பேசத் தெரியும். உம்மிடத்தில் பேசுவதில் பயனில்லை போம்! போம்!

சு. ம: என்ன சுவாமீ! இவ்வளவு சந்தேகப்பட்டு விட்டீர்கள்! நான் தங்களைக் குருவாக அடைந்து விட்டேனே என்று சொன்னேனே! தங்களிடத்தில் அல்லாமல் வேறு யாரிடத்தில் எனது முக்திக்கு வேண்டிய விஷயங்களையும், சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவடைவது?

பு. ம: வேண்டாமையா! நான் உமக்குக் குருவாகவும் இல்லை; என்னை எவ்வித கேள்வியும் கேட்க வேண்டாம்; என்னோடு கூட நீர் வரவும் வேண்டாம். நீர் சரியான சுயமரியாதைக்காரர் என்பதில் ஆக்ஷேபணையில்லை.

உம்மைப்போன்ற ஆள்களால் தான் என் பிள்ளைகள் கெட்டு இந்தப்படி நாசமாய் விட்டதுகள். சரி! போம்! போம்! இங்கே நில்லாதேயும்.

சு. ம: சுவாமிகளே கோபிக்காதீர்கள்! தங்களுக்கு வருத்தம் வருவதானால் நான் பேசவேயில்லை, வாயை மூடிக்கொள்ளுகிறேன்.

ஒரு சமயம் நான் மோக்ஷமடைய பிராப்த கர்மம் இல்லையோ என்னமோ தெரியவில்லை. தங்களைப்போன்ற பெரியார்களைக் குருவாக அடைந்தும் இப்படியாகிவிட்டது. என் சங்கதியைப் பின்னால் பார்த்துக் கொள்ளுகிறேன். தங்கள் விஷயத்தில் ஒரு சிறு சந்தேகம்! அதைக் கேட்கலாமா என்பதை எதிர் பார்க்கிறேன். அதை நிவர்த்தி செய்தால் திருப்தியாவேன்.

பு. ம: என்ன ஐயா சந்தேகம்?

சு. ம: இல்லை சுவாமிகள்! இவ்வளவு தீர்மானத்துடனும், உறுதியுடனும், பிடிவாதத்துடனும் இந்த முதிர்ந்த வயதில் முக்திக்காகப் போகின்றீர்களே, போகும் வழியில், காசி கயாவைப் போய் சேருவதற்கு முன் வழியில் ஏதாவது நேர்ந்து, தாங்கள் சாகவேண்டி ஏற்பட்டு விட்டால் இந்த உத்தேசங்கள் எல்லாம் என்ன ஆகிறது? நீங்கள்தான் திரும்பிவரப் போவதில்லையே பிறகு இன்று வாங்கும் கடனை யார் கட்டுவது?

பு. ம: நான் செத்துப் போய்விட்டால் நல்ல காரியமாச்சுது! போம் வெளியே! இங்கே நில்லாதேயும்! பயணம் புறப்படும்போது சகுனத் தடை மாதிரி! வாயில் வரும் வார்த்தையைப் பாருங்கள்! மனிதனுக்கு ஏதாவது புத்தியிருக்கிறதா? கடனைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டியதில்லை. அடுத்த ஜன்மத்தில் மாடாய்ப் பிறந்தாவது அவன் கடன் கட்டிவிடுவேன்.

சு. ம: சரி! சரி!! கோபித்துக்கொள்ளாதீர்கள்! நான் இதோ போகிறேன்! நீங்களும் உங்கள் சாஸ்திர புராணங்களும், அதற்கு நீங்கள் செய்யும் மரியாதைகளும் மிக நன்றாய் இருக்கிறது! இனி உங்களைப் போன்ற புராணமரியாதைக்காரர்களே மோக்ஷத்துக்குப் போகட்டும், அதற்காக கடன் கொடுத்தவன்கள் எல்லோரும் அடுத்த ஜன்மத்திலேயே வசூல் செய்யட்டும். ரொம்ப நாணயம்தான்.

—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசியாகின்றன. மசூதிகளில் குழந்தை காதில் ஊதுவதும் ஓர் வித உசுப்பே. இவ்வித உசுப்பால் சில நோய்கள் தீருவதால் இதனை அல்லாவின் அருள் என்று நினைக்கின்றார்கள்! மாதா கோவில்களினுள் ஊதுவத்தி கொளுத்துவதும், தண்ணீர் தெளிப்பதும் ஓர்வித உசுப்பென அறிதல் வேண்டும். இதனால் சில நோய்கள் தீர்ந்தால் இயேசுவின் மகிமையால் தீர்ந்ததாக எண்ணுகின்றார்கள்! வாஸ்தவத்தில் ஒருவனுடைய நம்பிக்கையே அவனுக்கு உசுப்பாக நின்று வேலை செய்கிறது. தேள் கொட்டுக்கு வேப்பிலையைக் கொண்டு மந்திரிப்பதும் ஓர் வித உசுப்பே. இப்படிப்பட்ட உசுப்புகளைப் பற்றிய உண்மை வரலாற்றைக் கண்டறிய நாம் ஆராய்ச்சி செய்யும்போது, உசுப்பால் சில நோய்கள் தீர்ந்த போதிலும் சாதாரண சிகிச்சைகளைக் கைவிடலாகாதென விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கின்றதை மறத்தலாகாது.

இப்நாடிஸத்தோடு சம்பந்தப்பட்ட டெலிபதி என்ற வித்தை வேறொன்றுண்டு. இந்த டெலிபதி என்னவெனில் ஒருவன் மனதில் தோன்றிய சொல்லையோ, விஷயத்தையோ இன்னொருவன் மனம் மூலமாக அறிதல்! இதற்கு அத்தாட்சி உண்டா, இந்தப்படி நடந்ததாக வரலாறு உண்டா, ஆதாரம் உண்டா, எடுத்துக்காட்டுகள் உண்டா என்று கேட்டால், நமது சாதாரண அனுபவத்தில் வரும் சில சம்பவங்களையே டெலிபதியால் தெரிந்துகொள்கின்றதாக இந்த டெலிபதி என்னும் "தொலைவில் உணர்தல்" வித்தையை நம்புவர்கள் கதை கட்டிவிடுகின்றனர். சில வேளையில் நாம் நினைத்தவர் வருவதுண்டு, நாம் நினைப்பதைப்போல் நடப்பதுண்டு. நாம் பல தடவை நமக்கு வேண்டியவர்களை வர வேண்டுமென்றாகிலும், சந்திக்க வேண்டுமென்றாகிலும், கோருகின்றோம். அதே பிரகாரம் ஒரு வேளையில் நாம் கோரியவர்களைச் சந்திக்கின்றோம். இதை டெலிபதி மூலமாக நேரிடுவதாக சிலர் எண்ணுகின்றார்கள். அதாவது நமது நினைப்பு அவர்களுடைய மனதில் ஏதோ வழியால் தூண்டப்பட்டு அவர்கள் புறப்படுவதாகவும், அதனால் நாம் அவர்களைச் சந்திப்பதாகவும் சொல்லுகின்றார்கள். கம்பி இல்லாமல் தந்திபோவதுபோல் ஒரு மனத்தில் தோன்றிய சமாச்சாரம் மற்றொரு மனத்தில் தோன்றுகின்றதாக சிலர் உத்தேசிக்கின்றார்கள். ஆனால் ஒரு மனத்தில் தோன்றிய விஷயம் மற்றோர் மனத்தில் தோன்றுகின்றதா என்பதைத்தான் பரீட்சிக்கவேண்டும். இதைப் பரீட்சித்தவரை டெலிபதி ருசுவடைந்ததாகப்படவில்லை. இவ்வித பரீட்சையில் தவறுதல் அதிகமாகக் காணப்படுகின்றன. சில இடங்களில் சில மெய்ஞ்ஞானிகளும் ஏமாந்து போனதாகத் தெரியவருகிறது. இதன் விஷயமாக கற்றறிந்த மெஞ்ஞானிகள், டெலிபதி என்னும் வித்தை மெஞ்ஞான முறைப்படி கடுமையாகப் பரீட்சிக்கப்படவில்லை என்றும், அவ்விதமாகப் பரீட்சை செய்தவரை சாதாரண காரணங்களால் ஒருவர் மனத்தில் தோன்றியதை இன்னொருவர் தெரிவித்திருக்கலாமென்றும், பன்முறை தம் நூலில் காட்டுகின்றார்கள். முக்கியமாக அகத்தினழகு முகத்தில் தோன்றும் என்ற பழமொழிக்கிணங்க ஒருவர் ஏதேனும் எண்ணத்தை எண்ணிக்கொண்டிருந்தால் தமக்குத் தெரியாமலே அதனை தமது வாயால் சொல்ல நேரிடுகிறது. இதனைத் தந்திரசாலி கண்டுகொண்டு தன் மனத்தில் தோன்றியதுபோல் சொல்லுகின்றான். இத்தியாதி மோசங்களால் ஜோதிடம் சொல்லுகின்றவர்கள் ஜீவிக்கின்றார்கள்.

பல தடவை ஒரு விஷயத்தைப் பற்றி நினைத்தால் ஒரு தடவையாகிலும் அதேமாதிரி நடக்கலாம். அந்த சம்பவத்தை மாத்திரம் நாம் கவனிக்கிறோமே யொழிய பல தடவை நினைத்தும் அதன்படி நடவாத சந்தர்ப்பங்களை கவனிப்பதில்லை. நமது பந்து மித்திர உறவினர்களைப் பற்றி நினைக்காத நாள் இல்லை. ஏதோ ஒருநாள் நினைத்தமாதிரி அவர்களுக்கு நேரிட்டாலும் நேரிடலாம். அதனைக்கொண்டே நாம் நினைத்தபடி நேரிட்டது, ஆதலால் அவர்கள் மனத்தில் அந்த சமயத்தில் நினைத்தது நமது மனத்தில் தாக்கியது என்று சித்தாந்தப் படுத்துவது மெஞ்ஞான சித்தாந்தமாகாது. ஏகதேச சம்பவத்தைக்கொண்டு அதன் காரணத்தை சித்தாந்தப் படுத்துவது பாமரமக்களுக்கு அடுக்குமே யொழிய மெஞ்ஞானிகளுக்கு ஒவ்வாது. நமது எண்ணம்போல் நடவாத சமயங்களை நாம் கணக்கெடுப்பதில்லை. ஏகதேச சம்பவத்தை மாத்திரம் கவனிக்கின்றோம். இந்த மனப்பான்மையால் எந்த மூடநம்பிக்கையையும் நம்புகின்றோம். இதுதான் மூடநம்பிக்கைகளிலுள்ள முக்கிய காரணம். இந்த மனப்பான்மையுள்ளவரை உலகம் மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்குமென்பதற்குத் தடையில்லை.

---


## "திருக்குறள் தெளிவு"

**தமிழ்மறை—உலகப்பொது நூல்**
**பத்திரிகையன்று—மாதம் இருபுத்தகம்.**

தைமாதத்திருந்து தமிழ்மாத 10, 25-ஆம் தேதிகளில், குறள் தொடக்கத்திலிருந்து ஒவ்வோர் அதிகாரமும் (10 குறள்) ஒவ்வொரு புத்தகமாக வருகின்றது. உள்ளே இனிய எளிய தெளிவுரையும், மணக்குடவரின் உரையும், பரிமேலழகரின் (ஆரிய) உரைப்பகுதிகளும் இருக்கின்றன. பின்பு, இவற்றை ஒன்று சேர்த்து (பைபிண்டு) கட்டினால் ஒரு நல்ல உரைப் புத்தகமாகும். தனிப்படி விலை 0—1—0. ஆண்டுக் கட்டணம் 1—8—0. அஞ்சல் செலவு 1—0—0. பலர் சேர்ந்து தருவித்தால் அஞ்சல் செலவு குறையும்.

**முக்கியக் கவனிப்பு** :—எங்கும் விற்பனையாளர் தேவை. கழிவு 100-க்கு 25%.

ஆசிரியர்: **வித்வான், சுந்தர. சண்முகனார்.**

**பைந்தமிழ்ப் பதிப்பகம்**

61–B, வைசியா தெரு, :: புதுச்சேரி.

84



(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது பேரன்மார் தோன்றுவதற்கு முன்னதாகவே அறிவு வெள்ளம் எழும். அது உலகம் முழுமையும் பாயும்.

நாம் இப்போது எப்படி (தற்கொலை செய்து கொள்ளுவதற்காக) யுத்தத்தளவாடங்களைக் கூட்டாக வாங்குகின்றோமோ அதுபோல் நம்பேரன்மார்கள் (நல்வாழ்வுவாழ்வதற்காக) வீடுகளையும் உல்லாச நகரங்களையும் வாங்குவார்கள். அவைகளில் களிப்போடு வாழ்வார்கள். அவர்களின் பாட்டன்மார்களான நம்மைப்பற்றிப் பேசும்போது நம்மை எள்ளி நகையாடுவார்கள். "என்னடா நமது பாட்டன்மார்களுக்கு 'இந்தச் சிறிய சங்கதிகூட விளங்காமல் போயிற்றே! அட பைத்தியங்களே!! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யிற்கு அலைவாருமுண்டோ?" என்றெல்லாம் சொல்லி நம்மைப்பற்றிப் பரிதாபப்படுவார்கள். நம்முடைய முட்டாள்தனத்தைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

இவ்வளவேதற்கு, நம்முடைய ஆயுள் காலத்திற்குள்ளேயே நாம் எவ்வளவோ மாறுதல்களைக் கண்டுவிட்டோமே! இனி வருங்காலத்தில் ஏற்படப்போகும் மாற்றங்களுக்கு இது உறைபோடவும் காணாது. அவ்வளவு மகத்தான மாற்றங்கள் வருங்காலத்தில் ஏற்பட இருக்கின்றன.

இன்று உலகில் காணப்படும் மகத்தான துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாய் இருப்பது நாம் கூட்டாக நின்று உற்பத்தி செய்யும் பொருள்களை அதே போல கூட்டாக நின்று அனுபவிக்கத் தெரியாத பைத்தியக்காரத்தனமே! அதோடு, பல முக்கிய பொருள்களின் உற்பத்தி தனிப்பட்ட முதலாளிகளின் சொத்தாக இருப்பதும் இந்த துன்பங்களை மேலும் மேலும் நிலைத்துநிற்கச் செய்கின்றது. இன்று துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரமாயிருப்பது உலகப் பொருள்கள் சரிவரப் பகிர்ந்து நிற்காமையே. வருங்காலத்தில் இந்த தொல்லைகள் யாவும் உறுதியாக தகர்த்தெறியப்படும். நம் பேரன்கள் காலத்தில் எங்கும் மருத்துவக்கலை வளரும், சுகாதாரச்சங்கங்கள் பெருகும், பொது நல உணர்ச்சி வீறிட்டெழும்; பார்க்கும் திசைகள் தோறும் அற்புத அழகிய நகரங்கள் தோன்றும், களிப்பே உருவெடுத்து வந்ததென்று சொல்லக்கூடியபடி மக்கள் வலிமை பொருந்திய உடல்களோடும், வசீகர முகங்களோடும் விளங்குவர். உடல்வலிமையிருந்தால் மனவலிமை தானாகவமையும். இப்படிப்பட்ட மக்கள் என்ன செய்துகொண்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்? சண்டை போட்டுக்கொண்டு இன்றுபோல் செத்த வாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை.

மூளைக்கு வேலை கொடுத்துக்கொண்டு புதிய புதிய விஷயங்களை ஆராய்வார்கள். புத்தம் புதிய பொருள்களை செய்து கொண்டிருப்பார்கள். புது வாழ்வு—நல்ல முழு வாழ்வு வாழ்ந்து கொண்டிப்பார்கள்.

---

(7ம்–பக்கம் தொடர்ச்சி)

ளாதாரப் புரட்சித் தொண்டும், அரசியல் எழுச்சிப் பிரசாரமும், தமிழை—தமிழர் கலையை—தமிழ்நாட்டுப் பண்பாட்டைக் காப்பதறகாக தமிழன் தொடுத்து நடத்தும் அறப்போரும்கூட அவர்களுக்கு அடுத்த தேர்தலுக்காக திராவிடர் கழகம் தேடும் "முஸ்தீ"பாகவே தோன்றுகின்றன! திராவிடர் கழகம் அடுத்த தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்பதை நன்றாக நம் தலைவர்கள் விளக்கியிருந்தும் தேசியவாதிகட்கு இந்த அச்சம் தீர்ந்ததாகக் காணோம்! அவர்களின் நினைவு, சொல், செயல் அத்தனையும், ஒவ்வொரு வினாடியிலும், அடுத்த தேர்தலைப்பற்றிய சிந்தனையிலேயே "லயித்துக்" கிடக்கிறது. எனவேதான் திராவிடர் கழகத்தின் அறப் போரையும்கூட அவர்கள், தேர்தல் கண்ணாடி மூலமே பார்த்து, அந்த மொழிப் போராட்டத்தையும் வெறும் தேர்தல் பிரசாரமாகவே கருதுகின்றனர். இயற்கைதானே! காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத்தானே" தோன்றும்!

"**அடுத்த தேர்தல்!** அதில் வெற்றி பெறவேண்டுமென்ற ஆசை! ஆகவேதான் திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்புப் போரை நிகழ்த்துகின்றது—வேறொன்றுமில்லை" என்று **காங்கிரஸ் தலைவர் காமராஜர்** இந்தக் கிழமை பேசியிருக்கிறார் கோவை நகரில்! **காங்கிரஸ் பிரதமர் ஓமந்தூராரோ**, சென்ற மாதம் தெளிவாகவே கூறிவிட்டார், "உரிமைப் போர் ஆற்றினால் சிறைபிடித்துவிடுவர்—சிறைபிடித்துவிட்டால் தியாகிகள் ஆகலாம்—தியாகிகளானால் அடுத்த தேர்தலில் வென்றுவிடலாம்—இதுதானப்பா குடந்தை நகரில் இந்தக் கருஞ்சட்டைக்காரர்கள் 144ஐ எதிர்த்து உரிமைப்போர் ஆற்றுவதன் காரணம்" என்று! அமைச்சர் குருபாதமும் சென்னையில் சென்ற ஞாயிறன்று இதையேதான் கூறியிருக்கிறார்!

**அடுத்த தேர்தல்!** அதில் திராவிடர் கழகம் தலையிட்டு வெற்றி பெற்றுவிட்டால் என்ன செய்வது என்றே ஓமந்தூரார்கள காமராஜர்கள் முதல் சாதாரண காங்கிரஸ்காரர்கள் வரை எல்லோரும் கைகளைப் பிசைந்துகொள்கின்றனர்—என்பதைத்தான் இந்த வாசகங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. ஏழை பாபம் அவர்கட்கு இந்த வீண் அச்சம்? திராவிடர் கழகம் அடுத்த தேர்தலில் போட்டி போடாது—நிச்சயம்! இந்த உண்மையை உணர்ந்து, அச்சம் தவிர்த்து, மன அமைதி அடைந்து நிம்மதியாக உறங்கலாம் ஓமந்தூரார்களும் ஓமந்தூரார்களை ஓமந்தூரார்களாக ஆக்கிய காமராஜர்களும்! நமது யோசனை இது! ஏற்றுக்கொண்டால் அவர்கட்கு நல்லது! பெறற்கரிய மன அமைதியை அவர்கள் பெற முடியும்!

---

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor: M. Ilancheliyan B A. (Hons